**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.226/2024 – PW-1**

| | |
|---|---|
| Name | திரு.சிவக்குமார் |
| Husband/Father Name | பரசுராமன் |
| Village /Area | நெமிலி |
| Taluk | நெமிலி |
| Occupation | அரசு மதுபானக்கடை விற்பனையாளர் |
| Age | 50 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 28.07.2025.

**(எதிரிகள் 1 முதல் 6 வரை ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 30.01.2024 அன்று அரசு மதுபானக்கடை புன்னை கிராமம் கடை எண்.11018 பணியில் இருந்த போது மாலை சுமார் 07.00 மணியளவில் என் உடன் பணிபுரிபவர் பாலசுப்பிரமணியம் மற்றும் பாபு சிறுநீர் கழிக்க வெளியே சென்றார்கள். ஒரு வாடிக்கையாளர் 1 பீர் பாட்டில் கேட்டார். அதற்கு நான் பணம் கொடு என்று கேட்டேன். அதற்கு அவர் வீச்சு அரிவாள் வைத்து கேட்டை தட்டினார் கேட் திறந்து கொண்டது. வீச்சு அரிவாள் காட்டி பணத்தை எடுத்துக்கொண்டு வெளியே சென்று விட்டார். பால சுப்பிரமணியம் என்பவரும் நானும் அவரை பின் தொடர்ந்து சென்றோம். பிறகு அவர்கள் பானாவரம் ரோட்டை நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்றார்கள். சம்பவம் குறித்து மேல் அதிகாரி மேளாளர் அவர்களுக்கு பணம் திருடு போனதாக தகவல் கொடுத்தோம். பிறகு நெமிலி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். டாஸ்மாக் கடையில் கணக்கு சரிபார்த்த போது ரூ.42,360/- எடுத்து சென்றது தெரிய வந்தது.

என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் அதசா. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். சாட்சி Remittance Challan தாக்கல் செய்ய வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**ஓம்./-திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**